**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண். 243/2020**

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் நாள் வியாழக்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரகுநாதன் | தொழில் | : விவசாயம் |
| த/பெ | : வேலுச்சாமி | கிராமம் | : வீரணம் பாளையம் |
| வயது | : 47 | தாலுகா | : காங்கயம் |
| | | மாவட்டம் | : திருப்பூர். |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 30 வருடங்களாக காங்கயம் பக்கம் முள்ளிபுறத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு பள்ளபாளையம் கிராமத்தில் சொந்தமாக 15 ஏக்கர் காடு உள்ளது. நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு வருடத்திற்கு தென்னை மரத்தின் மூலம் ரூ.10 லட்சம் வருமானம் வரும். பால்வியாபாரம் மூலம் மாதம் ரூ.1 லட்சம் வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்தவில்லை. என்னிடம் கடன் வாங்கிய நபர்கள் மீது நான் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. வழக்குரையில் சொல்லியுள்ள முருகசாமியை தவிர எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் வேறு நபர்களுக்கு நான் கடன் கொடுக்கவில்லை. நான் வழக்குரையில் சொல்லியுள்ள முகவரியில் 20 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எனக்கு வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. நான் கனரா வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கின் ஸ்டேட்மென்ட் என்னால் தாக்கல் செய்ய இயலும். முருகசாமியை 7–8 வருடங்களாக தெரியும். முருகசாமி மாடு வாங்க என்னிடம் வருவார் அந்த வகையில் அவருடன் 8 வருடத்திற்கு முன்னர் எனக்கு பழக்கம். முருகசாமி மாடு மற்றும் மாட்டுதீவனங்களும் வாங்கி விற்பார். திருப்பூரில் முருகசாமி வியாபாரம் செய்து வந்தார். முருகசாமிக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் எனக்கு சரியாக

தெரியாது. முருகசாமி எனக்கு எப்படி பழக்கம், என்ன தொழில் செய்து வந்தார்ல என்பதை எனது வழக்குரையிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 07.01.2018 அன்று முருகசாமிக்கு நான் பணம் கொடுத்துள்ளேன். 07.01.2018 அன்று என்னிடம் ரூ.12 லட்சம் இருந்தததது என்பதை காட்டுவதற்கு நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆண்டுக்கு ரூ.20 –25 லட்சம் நான் சம்பாதிக்கும் நிலையில் ஏன் வருமானவரி செலுத்துவதில்லை என்றால் விவசாயம் சார்ந்த வருமானம் என்பதால் வருமானவரி செலுத்துவதில்லை. தாவா புரோநோட் எங்கு வாங்கப்பட்டது என்றால் முருகசாமி தாவா புரோநோட்டை கொண்டு வந்தார். தாவா புரோநோட் வழக்குரையில் சொல்லியுள்ள எனது வீட்டு முகவரியில் வைத்து 07.01.2018 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் எழுதப்பட்டது. தாவா புரோநோட் எழுதும்போது முருசாமியுடன் செந்தில்குமார், விஜயகுமார் ஆகியோர் வந்தார்கள். மூன்று நபர்களும் சேர்ந்துதான் வந்தார்கள். இவர்களை தவிர வேறு நபர்கள் வரவில்லை. காலை சுமார் 10.00 மணியளவில் பணத்தை பெற்றுக்கொண்டு முருகசாமி சென்றுவிட்டார். ரூ.500/– நோட்டுக்களாக நான் கொடுத்தேன். எத்தனை கட்டுக்கள் என்பது ஞாபகம் இல்லை. நான் முருகசாமியிடம் 2018 ஆம் ஆண்டு 7 வது மாதம் கடைசியாக திருப்பூரில் உள்ள முருகசாமியின் வீட்டில் வைத்து தொகை கேட்டேன். முருகசாமி நான் கடைசியாக பார்த்தபோது அவர் திருப்பூரில் உள்ள அவரதுவீட்டில் இருந்தார். எந்த காரணத்திற்காக முருகசாமி இறந்தார் என்றால் தெரியாது. எந்த வருடம் முருகசாமி இறந்தார் என்றால் 31.12.2019 அன்று முருகசாமி இறந்தார். பிரதிவாதிகளை நான் எப்போது நேரில் சந்தித்து பணம் கேட்டேன் என்றால் முருகசாமி இறந்து 15 வது நாள் காரியம் செய்துகொண்டிருந்தபோது, பிரதிவாதிகளை சந்தித்து முருகசாமி என்னிடம் பெற்றிருந்த கடனை கேட்டேன். அப்போது பிரதிவாதிகள் எந்த முகவரியில் இருந்தார்கள் என்றால் திருப்பூர் ஆண்டிபாளையம் பூசாரிதோட்டத்தில் இருந்தார்கள். எனக்கும், முருகசாமிக்கு எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் யார் என்றே முருகசாமிக்கும் பிரதிவாதிகளுக்கும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.கடன் வாங்கக்கூடிய நிலையில் முருகசாமி ஒருபோதும் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. முருகசாமி இறப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே வாத நோயால் பாதிக்கப்பட்டு முருகசாமி படுக்கையில் இருந்தார் என்றால் 07.01.2018 அன்று முருகசாமி எனது வீட்டிற்கு வந்தார். 07.01.2018 காலகட்டத்தில் முருகசாமி கையெழுத்து போடமுடியாத நிலையிலும் மற்றும் புரோநோட் எழுதிகொடுக்க முடியாத

நிலையிலும் வாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து முருகசாமியுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் போர்ஜெரியாக தாவா புரோநோட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முருகசாமியோ பிரதிவாதிகளோ எனக்கு எந்த தொகையும் செலுத்தவேண்டியதல்ல என்று சொன்னால் சரியல்ல. ரூ.12 லட்சம்கடன் கொடுக்கக்கூடிய அளவிற்கு எனக்கு வசதியில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :- இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V JOHN MINO

Digitally signed by V JOHN MINO
Date: 2024.09.19 15:17:52 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.